பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மடல்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆடி 04 திங்கட்கிழமை (19-07-1993) UTHAYAN – A Lively National Tamil Daily கதிர் 233

# தெரிவுக்குழுவின் அழைப்பை தொண்டா மீண்டும் நிராகரிப்பு

## நம்பிக்கைதரும் முன்னேற்றம் ஏதும் ஏற்படவில்லையாம்

கொழும்பு, ஜூலை 19

தெரிவுக் குழுவில் மீண்டும் பங்கெடுத்துக் கொள்ளுமாறு தெரிவுக்குழுவின் தலைவர் மங்கள முனசிங்க விடுத்த வேண்டுகோளை அமைச்சர் தொண்டமான் நிராகரித்தார்.

தாங்கள் தெரிவுக்குழுவை பகிஷ்கரித்த பின்னர், மீண்டும் அதில் பங்குபற்றக்கூடியதாக நம்பிக்கை தரும் முன்னேற்றம் ஏதும் ஏற்படவில்லை என அமைச்சர் தொண்டமான் தெரிவித்திருக்கிறார்.

''பாரிஸ் ஈழநாடு'' பத்திரி

(5 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.கவுடன் சேர்வதா? காமினி கட்சிக்குள் இழுபறி!

ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டுச் சேர்வதற்கு ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் காமினி எடுத்து வரும் நடவடிக்கைக்கு அவரது கட்சிக்குள் பலத்த எதிர்ப்பு கிளம்பியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பி.பீ.ஜி கலுகல்ல, சமரவீர வீரவன்னி, எதிரிவீர பிரேமச்சந்திர, மொனிரி கோபல்லாவ முதலிய பிரமுகர்களே ஐ.தே. கவுடன் கூட்டுச்சேர்வதை கடுமையாக எதிர்க்கிறார்கள்.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசவுடன் மட்டுமல்லாமல், ஏனைய அரசாங்கத் தலைவர்கள் அனைவருடனும் முரண்பாடு கொண்டே லலித் அத்துலத்முதலி ஐ.தே.கவை விட்டு வெளியேறி தனிக்கட்சியை ஸ்தாபித்தார். ஆகவே அதனை மறந்து மீண்டும் ஐ.தே. கவுடன் இணைய முற்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## 78 ஆம் ஆண்டு அரசமைப்பை தூக்கி எறிந்து விடக்கூடாது

### முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 19

1978 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட அரசமைப்பை அப்படியே தூக்கி எறிந்து விடக்கூடாது.

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா மூன் கண்டவாறு தெரிவித்தார்.

நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சிமுறை என்ற தலைப்பில் அகில இலங்கைச் சோனகர் சங்கம் கடந்த திங்கட்கிழமை இலங்கைத் தேயிலைச்சபை மண்டபத்தில்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.ஐ.தே. முன்னணியை சேர்க்க ஐ.தே.க.நிபந்தனை

கொழும்பு, ஜூலை 19

மேல்மாகாண சபையில் சந்திரிகா குமாரணதுங்க தலைமையில் அமைக்கப்பட்டிருக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாகாண அரசுக்கு இதுவரை வழங்கி வந்த ஆதரவை ஐ.ஐ.தே. முன்னணி விலக்கிக்கொள்ளவேண்டும்.

ஐ. ஐ. தே. முன்னணியைக் கூட்டுச் சேர்த்துக் கொள்வதற்கு ஆளும் ஐ. தே. கவின் தலைமைப்பீடம் இவ்வாறு நிபந்தனை விதித்திருக்கிறதாம்.

ஐ. ஐ. தே. முன்னணியை தமது கட்சியுடன் கூட்டுச் சேர்த்துக் கொள்வதன் மூலம் அந்த முன்னணியின் ஆதரவுடன் ஆட்சி அமைத்திருக்கும் சந்திரிகாவின் அரசைக்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## ரொனி நாடு திரும்பினார்

முன்னாள் நிதி அமைச்சர் ரொனி டி மெல்லும் அவரது துணைவியார் மல்லிகா டி மெல்லும் கடந்த செவ்வாய்க்கிழமை லண்டனில் இருந்து கொழும்பு திரும்பினர்.

விமான நிலையத்தில் வைத்து அவரை, அவரது தேர்தல் தொகுதியைச் சேர்ந்த ஆதரவாளர்களும் அனுதாபிகளும் வரவேற்றனர்.

புதிய ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க தலைமையிலான ஆளும் ஐ. தே. கவில் மீண்டும் ரொனி டி மெல் சேர்ந்து கொள்வார் என கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது. (உ–எ)

## இன்று கிளாலி படகுச்சேவை

கிளாலி பூநகரி படகுச் சேவை இன்று திங்கட்கிழமை வழமையான நேரத்திற்கு நடைபெறும் என்று யாழ். மாவட்ட நிதித்துறையின் வருவாய்ப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார். (உ–5)

## அனுராவின் நிலை என்ன? இன்று முடிவு தெரியும்

### அரசுக்கு ஒத்துழைப்பு வழங்கலாம்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டிருக்கும் அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் அனுரா பண்டாரநாயக்காவின் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன? அவரது எதிர்கால அரசியல் நிலை எவ்வாறு அமையும்?

இவை சம்பந்தமான முடிவை இன்று அவர் வெளியிடலாம் என எதிர்பார்க்கப்படுவதாக நேற்றைய ''சண்டே ஒப்சேவர்'' பத்திரிகையில் தலைப்புச் செய்தி வெளியாகியுள்ளது.

தனியான முன்னணி ஒன்றை அமைத்து அவர் அரசுடன் ஒத்துழைப்பு வழங்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

தமது ஆதரவாளர்களுடன் அனுரா இன்று கூடிப்பேசி அவரது எதிர்கால நடவடிக்கை குறித்து அறிவிக்கலாம் என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

காவிரி நீர் தகராறை முன்வைத்து

## ஜெயலலிதா நேற்று முதல் திடீர் உண்ணாவிரதம்!

சென்னை, ஜூலை 19

காவிரி நீர்த்தகராறு பற்றிய நடுவர் மன்றத் தீர்ப்பை மத்திய அரசு உடனடியாகச் செயற்படுத்தவேண்டும் என்று கோரி தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா நேற்றுக் காலையில் இருந்து காலவரையற்ற உண்ணாவிரதத்தை ஆரம்பித்திருக்கிறார்.



காலை 9. 15 மணிக்கு எம் ஜி ஆர் சமாதியில் மலரஞ்சலி செலுத்திவிட்டு, சமாதிக்கு முன்பாக தமது உண்ணாவிரதத்தை அவர் துவக்கினார்.

ஜெயலலிதா உண்ணாவிரதப் போராட்டத்தைத் துவக்கிய செய்தி கேள்விப்பட்டு மாநில அ. தி. மு. க தலைவர்களும் எம். ஜி ஆர். சமாதிக்கு விரைந்தனர். ஏராளமான பொதுமக்கள் அங்கு கோஷங்கள் எழுப்பிய வண்ணம் இருந்தனர்.

மக்கள் அமைதியாக இருக்க வேண்டும் என முதலமைச்சர்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## சரிந்து வரும் செல்வாக்கை சரிப்படுத்த 'ஜெ' முயற்சி

★ வார இறுதியில் பிரதமர் நரசிம்மராவ் அரசுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்படவுள்ள நம்பிக்கையில்லாப்பிரேரணைக்கு ஆதரவாக அ. தி. மு. கவின் எம். பிக்கள் வாக்களிப்பதற்கு ஒரு காரணமாகவே இந்த உண்ணாவிரதத்தை முதலமைச்சர் ஜெயலலிதா மேற்கொண்டுள்ளார் என்று சென்னைச் செய்தியாளர்கள் குறிப்பிட்டனர்.

★ ஊழல் குற்றங்கள் காரணமாக சரிந்துவரும் தமது செல்வாக்கை நிலைநிறுத்தவே காவிரி நீர்த் தகராறை பயன்படுத்த முதலமைச்சர் ஜெயலலிதா முடிவு செய்துள்ளது போல் தோன்றுவதாகவும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

★ காவிரி நீர்த் தகராறு குறித்த நடுவர் மன்ற இடைக்கால தீர்ப்பை அமுல் செய்யும்படி தமிழக காங்கிரஸும் தி. மு. கவும் இயக்கங்களை ஆரம்பிக்க இருந்த தருணத்தில் முதலமைச்சர் ஜெய

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ சட்டங்களுக்கு அமைய புதிய நீதிமன்றங்கள் இயங்கும்

### சட்ட அறிஞர் கலந்துரையாடலில் தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை 19

★ தமிழீழத்தில் நிறுவப்பட உள்ள நீதிமன்றங்கள் முழுக்க முழுக்க தமிழீழ சட்டதிட்டங்களுக்கு அமையவே இயங்கும்.

★ தமிழீழ நீதிமன்றத்துக்கான நீதிச் சட்ட நூல் மிக விரைவில் வெளியிடப்படும்.

★ இந்த நீதிமன்றங்களில் போராளிகளே நீதியாளர்களாக இருப்பார்கள்.

★ நீதிமன்றங்களில் மக்கள் சார்பில் சட்டத்தரணிகள் ஆஜராகி வாதாடுவதற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நேற்று நடைபெற்ற சட்ட அறிஞர்களுக்கான கலந்துரையாடலின்போது, நீதி நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் திரு. பரா இத்தகவல்களை வெளியிட்டார்.

கலந்துரையாடலுக்குத் தலைமை வகித்த திரு. பரா நீதி நிர்வாக அமைப்புத் தொடர்பில் [illegible] தாவது:

(3 ஆம் பக்கம் பார்க்க)

## வாழப்பாடி வரவேற்பு

ஜெயலலிதாவின் திடீர் உண்ணாவிரதப் போராட்டத்தை வரவேற்பதாக தமிழக காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி தெரிவித்தார்.

ஜெயலலிதாவின் கோரிக்கையை தமிழக காங்கிரஸ் முழு மனதுடன் ஆதரிப்பதாகவும் அவர் கூறினார்.

இத்திடையில் —

உண்ணாவிரதத்தைக் கைவிட்டு பேச்சு வார்த்தை மூலம் காவிரி நீர்த் தகராறுக்கு தீர்வு காண உதவுமாறு கர்நாடக முதலமைச்சர் வீரப்பமொய்லி, தமிழக முதலமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

உண்ணாவிரதம் பிரச்சினையைத் தீர்க்க உதவாது; இரு மாநிலங்களில் வாழும் மக்கள் மத்தியில் பதற்றத்தையே அது உருவாக்கும் என்று திரு. மொய்லி தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டு. மாவட்டத்தில்

# பதுங்கியிருந்த ராணுவம் மீது விடுதலைப் புலிகள் தாக்கு!

## வேங்கைகள் இருவர் வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஜூலை 19
மட்டக்களப்பு மாவட்டம் மிணிமிந்தவெளி இடத்தில் கடந்த 10 ஆம் திகதி பதுங்கியிருந்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

அப்பகுதியூடாக செல்லும் விடுதலைப் புலிகள் மீது தாக்குதல் நடத்துவதற்காக படையினர் பதுங்கியிருந்தனர். இதனைக்கண்ட விடுதலைப் புலிகள் அவர்கள் மீது தாக்குதல் நடத்தினர்.

படையினருக்கு ஏற்பட்ட சேத விவரம் தெரியவில்லை.

இச்சம்பவத்தில் விடுதலைப் புலிகள் போராளிகளான கப்டன் உதயபாலன் (கந்தசாமி உதயபாலன் — கிரான்), வீரவேங்கை பார்த்திபராஜன் (கணேசன் யுகதீஸ்வரன் — திருக்கோவில்) ஆகியோர் வீரச்சாவடைந்தனர். (ஒ-3)

# பாக். பிரதமர், ஜனாதிபதி இருவரும் பதவிவிலக முடிவு

## அரசியல் நெருக்கடிக்கு ராணுவம் சமரசத்தீர்வு

வாஷிங்டன், ஜூலை 19
பாகிஸ்தானில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடிக்கு இராணுவத் தலைமைப்பீடம் சமரசத் தீர்வு ஒன்றை முன் வைத்திருக்கிறது.

இந்தத் தீர்வுத் திட்டத்தை ஏற்று அதன் அடிப்படையில் பதவி விலக பாகிஸ்தான் ஜனாதிபதி குலாம் இஷாக் கானும் பிரதமர் நவாஸ் ஷெரீபும் இணங்கியிருக்கிறார்கள்.

பாகிஸ்தான் செனட்டின் தலைவர் சஜான் இத்தகவலை வெளியிட்டதாக நேற்று நள்ளிரவு "வொய்ஸ் ஒவ் அமெரிக்கா" தகவல் வெளியிட்டது.

பிரதமர் நவாஸ் ஷெரீப் நேற்று நள்ளிரவு நாட்டு மக்களுக்கு ஆற்றிக்கொண்டிருந்த உரையில் தமது பதவி விலகல் பற்றி அறிவித்திருப்பதாகவும் "வொய்ஸ் ஒவ் அமெரிக்கா" தெரிவித்தது.

ஜனாதிபதி குலாம் இஷாக் கான் தாம் பதவி விலகுவதற்கு முன்னர் உலக வங்கியின் முன்னாள் அதிகாரியாக மோகல் குறோஷியை காபந்து பிரதம மந்திரியாக நியமிப்பார் என்றும் —

குலாம் இஷாக் கான் பதவி விலகியதும் தற்காலிக ஜனாதிபதியாக தான் பதவியேற்கவுள்ளதாகவும் செனட்டின் தலைவர் சஜான் தெரிவித்துள்ளார்.

ஆனால் ஜனாதிபதி குலாம் இஷாக்கான் தான் பதவி விலக இணங்கியிருப்பது பற்றி இன்னும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை.

பாகிஸ்தான் நாடாளுமன்றம் உடனடியாகக் கலைக்கப்படும் என்றும்—

மூன்று மாதத்துக்குள் அதற்கான தேர்தல்கள் நடத்தப்படும் என்றும் சஜான் மேலும் தெரிவித்தார். (உ-3)

# போராட்டம் நடத்திக் கொண்டே தெரிவுக்குழுவுடன் புலிகள் பேசலாம்

## பிரதமர் ரணில் கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 19
பேச்சுக்கு வருமாறு விடுதலைப் புலிகளுக்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழு பல தடவைகள் அழைப்பு விடுத்திருக்கிறது. புலிகள் போராடிக் கொண்டே தெரிவுக்குழுவுடன் பேசமுடியும். அதற்கேற்றபடி தெரிவுக்குழுவை இணங்க வைக்கலாம். பேச்சுவார்த்தைக்கு வருவதற்கு விடுதலைப் புலிகளுக்கு எவரும் கதவைப் பூட்டவேயில்லை.

— இவ்வாறு தெரிவித்திருக்கிறார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

பி.பி.ஸியின் சிங்களசேவையின் செய்தியாளருக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இப்படித் தெரிவித்தார்.

"விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கைவிட்டு அரசுடன் பேச்சு நடத்த வேண்டும் என நீங்கள் கருதுகிறீர்களா?" — என்று கேட்கப்பட்டபோதே அவர் இப்படிக் குறிப்பிட்டார். (உ-எ)

ஜி. சி. ஈ (உயர்தர) பரீட்சை:

# காகிதாதிகள் 'குமண'வில் புதனன்று வந்து சேரும்

எதிர்வரும் 2 ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் ஜி.சி.ஈ. (உயர்தரப்) பரீட்சைக்கான காகிதாதிகள் 'குமண' கப்பலில் நாளை மறுதினம் புதன் கிழமை பருத்தித்துறைக்கு எடுத்துவரப்படவிருக்கின்றன.

பரீட்சைக்கான காகிதாதிகளை எடுத்துவர கப்பல்வசதி கிடைக்காததால் விமானம் மூலம் எடுத்துவர பரீட்சை ஆணையாளர் முயற்சி மேற்கொண்டார் என்றும் —

பாதுகாப்பு அமைச்சு அனுமதி கிடைக்காததால் 'குமண' கப்பலில் அவற்றை அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டதாகவும் நேற்று மாலை கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

பிரதேச கல்வி அலுவலகங்களுக்கு

# 12 பணிப்பாளர்கள் புதிதாக நியமனம்

யாழ்ப்பாணம், ஜூலை 19
யாழ். கல்வி அலுவலக வேலைகளை பன்முகப்படுத்தும் திட்டத்தின் கீழ் 12 பிரதேச கல்விப்பணிப்பாளர்கள் வடக்கு—கிழக்கு மாகாண சபை கல்வி அமைச்சால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தற்சமயம் நடைமுறையில் உள்ள கோட்ட, கொத்தணி திட்டங்களுக்குப் பதிலாக உருவாக்கப்படவிருக்கும் பிரதேச கல்வி அலுவலகங்களுக்கே அவர்கள் நியமனம் பெற்றுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் இயங்கும் 14 பிரதேச செயலர் பிரிவுகளிலும் ஒவ்வொரு பிரதேச கல்வி அலுவலகம் அமைக்கும் இத்திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக 13 பிரதேச கல்விப் பணிப்பாளர்களுக்கு நியமனக் கடிதங்கள் யாழ். கல்வி அலுவலகம் ஊடாக அனுப்பப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம், சங்கானை 'பிரதேச கல்வி அலுவலகங்களுக்கு மட்டும் இன்னும் எவரும நியமிக்கப்படவில்லை.

பிரதேச கல்விப் பணிப்பாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடிதங்களில் நியமனம் உடனடியாக அமுலுக்கு வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

கொழும்பில் தற்சமயம் உள்ள யாழ். பிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் யாழ். திரும்பிய பின்னரே இத்திட்டம் எப்போது நடைமுறைக்கு வரும் என்பது குறித்து முடிவு செய்யப்படும் எனத் தெரியவந்தது. (ஒ-3)

## இளைஞர் காயம்

அநாதரவாகக்கடந்த மிதிவெடியை கையில் எடுத்துப் பார்த்துவிட்டு அதனை கீழே வீசியபோது அது கல்லொன்றில் பட்டு வெடித்ததில் ஒருவர் காயமடைந்தார்.

இச்சம்பவம் குஞ்சுப்பரந்தனில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

பூநகரி பல்லவராயன் கட்டைச் சேர்ந்த தர்மலிங்கம் மகேந்திரன் (வயது 24) என்பவரே இச்சம்பவத்தில் காயமடைந்தவராவார். இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# நல்லூர்க் கந்தன் உற்சவம்; சனிக்கிழமை ஆரம்பம்

## ஏற்பாடுகள் பூர்த்தி

யாழ்ப்பாணம், ஜூலை 19
நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

உற்சவத்தையொட்டிய ஏற்பாடுகள் ஆலயச் சூழலில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கோவிலுக்கு முன்பாகவுள்ள பருத்தித்துறை வீதியில் தண்ணீர்ப் பந்தல் வழமைபோல் அமைக்கப்பட்டுள்ளது

பழைய பொலீஸ் நிலையக் கட்டடத்தில் தமிழீழ காவல்துறையினரின் திருவிழா கால பணிமனை அமைக்கப்பட்டு வருகிறது. அதற்கு முன்பாகவும் பந்தல் அமைக்கப்பட்டுள்ளது.

ஆலயச் சூழலில் வழமைபோல சில வீதிகள் வாகனப் போக்குவரத்துக்கு மூடப்படும்.

இதற்கிடையில் —
நல்லூர் கந்தன் வருடாந்த உற்சவ ஏற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் யாழ். மாநகரசபை ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தொண்டர் ஸ்தாபனங்கள், காவல்துறையினர், மாநகர சபை பிரதிநிதிகள் பங்கு பற்றவுள்ள இக் கலந்துரையாடலில் கடந்த மாதம் 16ஆம் திகதி இது தொடர்பாக நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் முடிவாக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (உ-க-5-162)

## ஐ. ஐ. தே. மு ன்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
கவிழ்க்க ஐ.தே.க தலைமைப்பீடம் திட்டமிட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தமது திறமையை வெளிப்படுத்த சந்திரிகா குமாரணதுங்காவுக்கு வாய்ப்பளிக்கக்கூடாது என ஐ.தே.க வின் தலைப்பீடம் கருதுவதாகவும்—

மேல் மாகாணசபை மூலம் அடுத்த ஆறு மாதத்திற்குள் அமுல் செய்வதற்காக நிபுணர்களைக் கொண்டு சந்திரிகா தயாரித்திருக்கும் முக்கிய திட்டங்களை செயற்படுத்தவிடாது தடுப்பதும்— ஐ.தே.க. தலைமைப்பீடத்தின் நோக்கமாகும்.

தற்போது கொழும்பில் இடம்பெற்று வரும் அரசியல் மாற்றங்களைப் பார்க்கும் போது மேல்மாகாண சபையின் ஆட்சியில் மாற்றம் ஏற்படுவது தவிர்க்க முடியாதது என அரசியல் அவதானிகள் தெரிவித்தனர். (உ-6)


நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் தேவஸ்தானம்
கைலாசவாகன உற்சவம்
************
காலம்:- இன்று 19—07—1993 திங்கட்கிழமை
நேரம்:- இரவு 7 00 மணி
தெய்வீகப்பேருரை: திரு. சிவமகாலிங்கம் (விரிவுரையாளர், பலாலி ஆசிரியர் கலாசாலை)
★ பட்டி மண்டபம் ★
நடுவர்:- தமிழ் அருவி திரு. த. சிவகுமாரன் (ஆசிரியர், யாழ். இந்துக் கல்லூரி, அமைப்பாளர், காரைநகர் கம்பன் கழகம்)
பொருள்
தமிழ் இலக்கியங்களில் பெரிதும்போற்றப்படுவது
காதலா? — ஆசிரியர்கள்: திரு. ஜெயராமசர்மா, திரு. பாலா, திரு. ஜோதிதாஸ்
வீரமா? — ஆசிரியர்கள்: திரு. கலாகரன், திரு. மகேந்திரன், திரு. காரை கெங்கா
(26573)



சுதுமலை
ஸ்ரீ புவனேஸ்வரி அம்மாள் தேவஸ்தான
ஆடிப்பூரவிழாவும் இலட்சார்ச்சனையும்
14 — 07 — 1993 முதல் நடைபெறுகிறது.
தெய்வீக தொடர் சொற்பொழிவு
தினமும் மாலை 6 30 மணிக்கு
விடயம்:
"மகாபாரதம்"
நிகழ்த்துபவர்:
கானகதாவாரிதி
பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்தசர்மா
23 - 07 - 1993 காலை சங்காபிஷேகமும் ருது சாந்தி வைபவமும், மாலை சுவாமி வீதி உலாவைத் தொடர்ந்து "மகாபாரதம்" தொடர் பூர்த்தி விழா இடம்பெறும்.
மேற்படி தர்மகர்த்தாசபையும் விழா உபயகாரர்களும்.
பிரசுர அன்பளிப்பு:
எஸ்.வி.எம். ஸ்ரோர்ஸ், சுதுமலை.
(26569)



ஆவரங்கால்
நடராச இராமலிங்கேஸ்வரர் தேவஸ்தானம்
பர்வத பத்தினி அம்பாள்
★ 7ஆம் திருவிழா ★
காலம்: இன்று (19 — 07 — 1993) செவ்வாய்க்கிழமை
★ விசேட நிகழ்ச்சிகள் ★
மாலை 5-00 மணி — மேளக்கச்சேரி
நாதஸ்வரம்: S. S. சிதம்பரநாதன், A. சுதந்திரன், N. கபிலதாஸ்
தவில்: S. சொர்ணலிங்கம், N. பாலசுப்பிரமணியம்
இரவு 9-00 மணி — இன்னிசைக்கச்சேரி
சங்கீதபூஷணம் S. பத்மலிங்கம் — பாட்டு
உடன்பாடுபவர் R. குகானந்தன்
இசைஞான திலகம் R. ராதாகிருஷ்ணன் — வயலின்
சங்கீதரத்தினம் M. சிதம்பரநாதன் — மிருதங்கம்
கலாவித்தகர் K. கண்ணதாசன் — கடம்
வித்துவான் K. P. வீரசாமி — கஞ்சிரா
வித்துவான் S. ராஜா — முகர்சிங்
விசேடமாக அமைக்கப்பட்ட அன்னப்பட்சியில் அம்பாள் வீதிவலம் வருவார்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
-- 7ஆம் திருவிழா உபயகாரர்.
(26571)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மன்

## ★ வருடாந்த மஹோற்சவ சிறப்பு மலர் ★

19-07-1993

# தஞ்சம் என வந்தோருக்கு தண்ணருள் புரியும்

# தெய்வம் அல்வை வேவிலந்தை முத்துமாரி அம்மன்

சைவமும் தமிழும் சிறப்புற்று விளங்கும் அல்வாய்க் கிராமத்தில் மூர்த்தி தலம் தீர்த்தம் மூன்றும் முறையாக அமைந்து விளங்கும் வேவிலந்தை முத்துமாரி அம்மன் ஆலயத்தின் வரலாறும், அம்பாளின் பெருங்கருணையும், அருட் சிறப்பும் சைவப் பெருமக்களை பெருமிதம் கொள்ளச் செய்பவை.

வேம்பும் இலந்தையும் அக்காலத்தில் இருந்த இ மாதவால் வேவிலந்தை என இத்தலத்துக்குப் பெயர் வந்தது என முதியோர் வாயிலாக அறிய இருந்தாலும், ஆலயம் அமைக்கப்பெற்ற வரலாறு ஒன்றும் உண்டு.

ஏறக்குறைய நானூறு ஆண்டுகளுக்கு முன்னர் இவ் ஆலயம் தோன்றியிருக்கலாம்.

### உடைச்சி கொண்டுவந்த விக்கிரகம்

அல்வாய்க் கிராமத்தில் சைவாசாரசீலமும் சிவநெறிப் பற்றும் மிக்கவரான வள்ளி உடைச்சி இந்தியாவிலுள்ள பல புண்ணிய க்ஷேத்திரங்களுக்குச் சென்று வழிபாடாற்றி வரும்போது ஒரு நாள் அம்மன் கனவில் தோன்றி, ''நீ என்னை உன்னுடைய இடத்திற்கு கொண்டு போ'' எனக் கூறியது.

உடைச்சிக்கு எதுவும் விளங்காமையால் கவலைப்பட்ட போது, ''நீ கவலைப்பட வேண்டாம். மதுரையில் சிலா



விக்கிரகங்கள் விற்குமிடத்தில் நான் இருப்பேன். நீ அங்கு வா'' எனக் கூறவும் உடைச்சி அங்கு சென்று பார்க்கவும், அங்குள்ள விக்கிரகங்களில் ஒன்று மாத்திரம் ஜெகஜோதியாக பிரகாசித்துக் கொண்டிருப்பதைக் கண்டார்கள். உடைச்சி உரோமஞ்சிலிர்ப்பக் கண்ணீர்வார விக்கிரகத்தைக் கொண்டுவந்து தான் வசிக்கும் இடத்தில் வைத்து உபாசித்து வந்தார்

அந்திய காலம் நருங்கும் போது அம்பாளின் உபாசனை நின்றுவிடுமா என்ற கலக்கம் உடைச்சிக்கு உண்டானது அம்பாள் கனவில் தோன்றி, ''நீ கவலைப்பட வேண்டாம் என்னை அந்த இலந்தையின் கீழ் வை'' என்று தற்போது ஆலயம் அமைந்துள்ள இடத்தைச் சுட்டிக் காட்டியதாம்.

உடைச்சி விழித்தெழுந்து தான் கனவில் கண்டபடி தற்போது ஆலயம் உள்ள இடத்தில் அம்மனை வைத்து தினமும் விளக்கேற்றுவதற்காக சைவக்குடும்பம் ஒன்றையும் ஏற்படுத்தினார் என்று கர்ண பரம்பரைக் கதை கூறுகிறது.

### வேள்வி செய்வது நிறுத்தப்பட்டது

பிற்காலத்தில் உடைச்சியின் சொந்தக்காரர் ஓலைக்கொட்டில் கட்டி முத்துமாரி என்ற பெயரில் ஆண்டுதோறும் வேள்வி செய்து வந்தார்கள். சில வருடங்கள் சென்றதும் அவர்கள் பரம்பரையில் வந்த நமசிவாயம் வேலுப்பிள்ளை ஊரவர்களின் உதவியுடன் நிதி திரட்டி சுண்ணாம்புக் கல் கட்டடம் கட்டி தேவியை எழுந்தருளப்பண்ணி கும்பாபிஷேகம் செய்வித்ததுடன், வேள்வி செய்வது துர்க்கிருத்தியம் என அதனை நிறுத்துவித்தார். ஒரு காலப்பூசையும் ஆண்டில் ஒருமுறை இரவுத் திருவிழாவும் செய்யவும் ஏற்பாடு செய்தார்.

[illegible]

பெறுமிடத்தில் குளம் இருந்ததென்றும் அதில் நீர் அள்ளியே பொங்குவார்கள் என்றும் தெரிகிறது.

அதன் பின்னர் சைவ அபிமானிகள் யாவரும் சேர்ந்து இரவுத் திருவிழாவுடன் பகற் திருவிழாவும், திருவெம்பாப் பூசை, நவராத்திரி, பங்குனி உத்தர அபிஷேகம் ஆகியவற்றை காலத்திற்கேற்றவாறு செய்து வந்தனர்.

### ஆலயம் வளர்ந்த வரலாறு

அம்பாளின் திருவருளினால் ஊரவர்களிடம் நிதி திரட்டி கோயிலை பாலஸ்தானம் செய்து 1928இல் கர்ப்பக்கிருகம், அர்த்த மண்டபம் இரண்டையும் கட்டிக் கும்பாபிஷேகம் செய்வித்தார்கள்.

இச்சமயத்தில் கோயில் நிர்வாகத்தினரிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்படவும் ஆலய பரிபாலனம் நடத்துவது சிக்கலாயிருந்தது

1876 இல் எழுதப்பட்ட உறுதிப் பிரகாரம் மாவட்ட நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கில் 1929 இல் யாவர்க்கும் பொதுக் கோயிலாக ஆலயம் பிரகடனப்படுத்தப்பட்டது.

நீதிமன்றம் ஏறி வழக்காடி அனைவரும் வழிபடும் தலமாக ஆக்கிய பெருமை, உயர்திரு வ. ஆறுமுக உபாத்தியாயரையே சாரும்.

1948 ஆம் ஆண்டளவில் திரு. க. இராமலிங்கம் அவர்களும், 1953இல் திரு.கோ கதிரேசு அவர்களும் செயலாளர்களாகக் கோயில் திருப்பணிகள் பல செய்து மக்கள் பரிபாலனம் எனப் புகழப்படும் வகையில் தொண்டாற்றியதும், திரு. கோ. கதிரேசு அவர்களின் அயரா முயற்சியினால், தரிசனமண்டபம், வெளிமண்டபம், பரிவார மூர்த்திகளான விநாயகர், முருகன், வைரவர் ஆகிய தெய்வங்களுக்குத் தனித்தனி கோயில்கள் கட்டியதும், ஆறுமுக உபாத்தியார் சுமார் இருபது வருடங்களாக தம் வாக்கு வன்மையால் ஊரவர்களிடம் நிதி திரட்டி, கர்ப்பக்கிருகம் முதல் மகாமண்டபம், கோபுரவாசல் ஆகியவை வரை யாவும் ''ஊரவர்பணி''எனப்பொறிப்பித்த பெருமையும் குறிப்பிடத்தக்கவை.

அதனைத் தொடர்ந்து 1972 இல் திரு. பாலசிங்கம் அவர்கள் பரிபாலனத்திற்கு வந்தார். அன்னாரின் காலத்தில்தான் பல திருப்பணிகள் நடைபெற்றன. 24-08-73இல் மூர்த்திகள் பெயர்க்கப்பட்டு, 26 08 - 73 இல் பாலஸ்தாபனம் செய்து, ஊரவர்கள், அபலவர்கள், பரோபகாரிகள், பெருநிதி படைத்தோர் யாவரும் மனம் வந்து நிதி வழங்கினார்கள். அக்காலம் பஞ்சகர்த்தாக்களாகியிருந்தோரின் அயரா முயற்சியால் தலைசிறந்த சிற்பாச்சாரியாரான திரு. க. நாகலிங்கமும்,

(5 ஆம் பக்கம் பார்க்க)

## வாழ்த்துகிறோம்

**★ ஸ்ரீமுருகன் பலசரக்கு மாளிகை ★**
கண்டி வீதி, கொடிகாமம்.

**கணேஷா ஸ்ரோர்ஸ் & குயிலநாதன் நியூஸ் ஏஜென்ஸி**
அல்வாய்.

**ஆனந்தா ரேட்ஸ்**
அல்வாய்.

**மகேஸ்வரன் ஸ்ரோர்ஸ்**
அல்வாய்.

**சதாப் பொன்ஸ்**
அல்வாய்.

**அருளானந்தம் ஸ்ரோர்ஸ்**
அல்வாய்.

**செந்தில்நாதன் துவிச்சக்கர வண்டி பழுது பார்க்கும் நிலையம்**
நெல்லியடி.

**சிவலிங்கம் ஸ்ரோர்ஸ்**
நெல்லியடிச் சந்தை, நெல்லியடி.

**ஜமுனா ஸ்ரோர்ஸ்**
மொத்த, சில்லறை,
பலசரக்கு வியாபார மாளிகை
நெல்லியடி.

**செல்லமுத்து புடைவை மாளிகை**
பிரதான வீதி, நெல்லியடி.

**எஸ். கே. சாமி புத்தகசாலை**
(விவசாய கிருமிநாசனி உரவகைகள் பாடசாலை புத்தக உபகரணங்கள்)
நெல்லியடி.

**நெல்லியடி விற்பனை நிலையம்**
பிரதான வீதி, நெல்லியடி.

**வானதி மில்**
சாமியன் அரசடி, நெல்லியடி.

**★ ராணி மில் ★**
பிரதான வீதி, நெல்லியடி.

**நைலன் பேக் ஹவுஸ்**
(தரமான பாண், பணிஸ், கேக், பிஸ்கற் வகைகள் தயாரிப்பாளர்கள்)
வியாபாரி மூலை, பருத்தித்துறை.

**ஸ்ரீ முருகன்**
மருந்துச் சரக்கு மாளிகை
(ஆங்கில ஆயுள்வேத மருந்து வகைகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்)
பிரதான வீதி, பருத்தித்துறை

விளம்பர இலக்கம் (26548)

# திருவருள் நல்கும் அன்னை முத்துமாரி

மனித சக்தியின் ஆன்மிக வளத்தைப் பெருக்கும் அருட் குளங்களாக ஆலயங்கள் விளங்குகின்றன. அவ்வாறான ஆலயங்களில் நடைபெறும் உற்சவங்கள் திருவருளை அதிகமாகப் பெறும் வாய்ப்பினைத் தருகின்றன. அத்தகைய ஒரு வாய்ப்பினை வருடம் தோறும் அல்வாய் வாழ் மக்களுக்கு அன்னை முத்துமாரி அம்மன் அளித்துக் கொண்டிருக்கிறார்.

''அம்பிகையைச் சரண் புகுந்தால் அதிக வரம் பெறலாம்'' என்பார்கள். இறைவன் கூட சக்தியோடு சேர்ந்து தான் திருவருளை நல்கிறார்.

''தன்னிலமை மன்னுயிர்கள் சாரத் தரும் சக்தி பின்னமிலான் எங்கள் பிரான்'' என்பது திருவருட்பயன். அந்தவகையில் இவ்வூர் மக்களும் இவ்வாலய பரிபாலன சபையாரும், விழாக்களைச் செய்யும் உபயகாரர்களும், முத்துமாரி அம்பிகையில் அதிக பக்தியும், ஆழ்ந்த தொண்டும் உடையவர்கள். எனவே இத்தகைய விழாக்கள் மூலம் அவர்கள் அனைவரும் அம்பிகையின் திருவருளைப் பெற்று, சகல சௌபாக்கியங்களோடும் பல்லாண்டு காலம் வாழவேண்டும் எனப் பிரார்த்தித்து ஆசி கூறுகிறேன்!

தி. கிருஷ்ணமூர்த்திக் குருக்கள்,
தேவஸ்தான குரு.

# அற்புதங்கள் பல புரியும் மாரியம்மனின் அருளாட்சி

அல்வாய் ஸ்ரீ முத்துமாரி தாய்க்கு இன்று மஹோற்சவம் ஆரம்பமாவது மகிழ்ச்சியைத் தருகிறது.

பயபக்தியும் ஒழுங்கும் நிலவுகின்ற சிறந்த ஆலயம் இது. அற்புதங்கள் பல புரியும் மாரியம்மாள் இங்கு எழுந்தருளி அருளாட்சி புரிகின்றாள்.

இந்த ஆலயத்தை நிர்வகிப்பவர்களின் தொண்டுள்ளத்தையும் கண்ணியத்தையும் நான் பல முறை பாராட்டியிருக்கிறேன். மனத்தூய்மைமிக்க தொண்டர்களும் சிவபுண்ணிய சீலர்களும் இவ்வாலயத்தின் பெருமைக்கு காரணமாக அமைந்தவர்கள்

இத் தொண்டர்களின் அயரா உழைப்பும், தன்னலம் கருதா சேவை மனப்பாங்கும், பணியாற்றலும் சேர்ந்த பல திருப்பணிகளை இன்று நிறைவேற்றியிருக்கின்றன.

அன்னையின் கொடியேற்றம் ஆரம்பமாகும் இந் நாளில் அந்தத் தர்மக்கொடியின் ஏற்றத்தினால் நாமும் உயர்வடைவோமாக!

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி,
தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

ஒன்று, இரண்டு, மூன்று மாதங்கள் கொண்ட சிங்கி, பாமாஸ், பன்ரம், வெள்ளடிக் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. இல 70/6, ஈச்ச மோட்டை வீதி, யாழ்ப்பாணம். (26557)

### விற்பனையாகிறது!

மா. சின்னத்தம்பியின் தேசிய வருமானம் ஆண்டு 11 இற்குரிய வரலாறும் சமூகக் கல்வியும், படவேலைப் பயிற்சி செயல்நூல் இதுவரை வெளி வராத புதிய நூல். கிடைக்கும் இடம்: ஸ்ரீலங்கா புத்தக சாலை, யாழ்ப்பாணம். (சி-5485)

### வகுப்புக்கள்

திறமையான ஆசிரியரினால் நுணுக்கமான முறையில் ஓஎல், சிற்றார் வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன (மாலை 3 மணிக்கு பிற்பாடு) தொடர்பு: ந. பத்மதேவா, நாகலிங்கம் ரெ ர ஸ், (வங்கிக் கிழக்கு ஒழுங்கை), மானிப்பாய். (26521)

### புலமைப் பரிசில் பரீட்சை

Bond கல்வி நிறுவனத்தால் ஒவ்வொரு ஞாயிறும் வெளி விடப்படும் ஆண்டு - 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான மாதிரிப் பயிற்சி வினாத்தாள்கள் பூபாலசிங்கம் புத்தக சாலை, மகியலன் புத்தக சாலை- யாழ்ப்பாணம் S. K. சாமி- நெல்லியடி, பளிங்கு- சாவகச்சேரி ஆகிய இடங்களில் பெற்றுக்கொள்ளலாம். (6352)

### தட்டெழுத்தாளர் தேவை

ஆங்கில தட்டெழுத்தாளர் எமது சங்கத்திற்கு தேவை. ஆங்கில சுருக்கெழுத்தும் தெரிந்திருத்தலோடு மல்லாகத்திற்கு அண்மையில் வாழ்பவர் விரும்பத்தக்கது சுய விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். சு. ஸ்ரீபாஸ்கரன், தலைவர், மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கம், மல்லாகம், (5997)

## ஆலயங்களில்

சதுமலை ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் ஆலய ஆடிப்பூர விழாவும் இலட்சார்ச்சனையும் ஸ்ரீசக்கர பூஜையுடன் கடந்த புதன்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

அங்கு தினமும் மாலை 6-30 மணிக்கு கானசதா வாரிதி கந்தர்மடம் பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்த சர்மா 'மகா பாரதம்' பற்றி சொற்பொழிவாற்றி வருகிறார். (த-5)

o o o

அராலி தெற்கு தறாணன் ஞான வைரவர் கோயில் வருடாந்த பொங்கல் பூசை நாளை பிற்பகல் 2மணி முதல் ஆரம்பமாகி நடைபெறும். (த-12)

### நல்லைக் குமரன் மலர் வெளியீடு

நல்லூர் கந்தசுவாமி கோயில் உற்சவத்தைமுன்னிட்டு யாழ் மாநகர சபையின் சைவசமய விவகாரக் குழு 'நல்லைக் குமரன் மலர்' என்ற நூலை வெளியிடவுள்ளது.

எதிர்வரும் 24ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத் திருவிழா அன்று மலர் வெளியிடப்படவுள்ளது. மலரில் மேற்படி ஆலய வரலாற்றுச் சிறப்புக்கள் இந்து மதம் குறித்த சிறப்புக் கட்டுரைகள் இடம் பெறும்.

இது தவிர நல்லூர் உற்சவத்தையொட்டி வழமையாக நடத்தப்படும் சமய அறிவு பண்ணிசை, பேச்சுப் போட்டிகளுடன் இம்முறை கவிதை, கட்டுரைப் போட்டிகளையும் மாநகரசபை நடத்தவுள்ளது. (த-111)

# மணிவிழாக் காணும் நாயகன்



## திரு. க. யதுகுலசிங்
P. T. (SP. TR.) S. L. E. A. S.
[உடற்கல்வி விரிவுரையாளர்- கோப்பாய்]

மூன்று பத்தாண்டு காலம்
முறையாகச் சேவையாற்றி
சான்றுகள் பல படைத்த
சற்குரு யது குலசிங்
வான் புகழ் கொண்ட பயிற்சிக்
கலாசாலை யாழில் எங்கும்
மாண்புறு பணிகள் கண்டோம்
மகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்.


முதலாம் வருட ஆரம்பக்கல்வி A பிரிவினர்
ஆசிரியர் கலாசாலை, கோப்பாய்.
(26563)

# பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை

பாதுகாப்பு துறையில் அனுபவமும், ஆற்றலும் உள்ளவர்கள் தகுதிச் சான்றிதழ்களுடன் 20-07-1993 செவ்வாய்க்கிழமை காலை 9 — 12 மணி வரை நேரில் வரவும்.

நிர்வாக முகாமையாளர்,
அருண் மார்க்கட்டிங்,
இல. 15, 2ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-5396)

# 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## மாணிக்கம் நவரெத்தினசிங்கம்

மலர்வு: 18-05-1940
மறைவு: 25-07-1987
திதி: 19- 07 - 1993

எங்கள் அருமை ஒளி விளக்கே!
உங்களின் மறைவு ஆறு ஆண்டுகள்
சென்றாலும் எங்கள் துயரக் கண்ணீருடன்
அஞ்சலி செலுத்தி உங்கள் ஆத்மா
சாந்தி அடைய தினமும் பிரார்த்தித்து வரும்!

அன்பு மனைவி, மக்கள், மருமகன்,

நவஜோதி வாசா,
ஆஸ்பத்திரி வீதி, [illegible]
(26533)

# குருக்கள் தேவை

கொக்குவில், தாவடி
## வேம்படி முருகமூர்த்தி கோயில்

நித்திய, நைமித்திய பூசைகளை மேற்படி ஆலயத்தில் நிரந்தரமாகச் செய்வதற்கு அனுபவமுள்ள குருக்கள் தேவை. இருப்பிட வசதிகள் செய்து கொடுக்கப்படும். வேதனம் நேரில் பேசிக்கொள்ளலாம்.

★ 31—07—1993 க்கு முன் சகல விவரங்களுடனும் நேரிலோ கடிதம் மூலமோ விண்ணப்பிக்கவும்.

-தர்மகர்த்தா சபை.

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.
(26564)

# ஈராண்டு நினைவஞ்சலி



| மண்ணகம்: | விண்ணகம்: |
|---|---|
| 15 | 19 |
| 01 | 07 |
| 1933 | 1991 |

அமரர்
## சோமஸ் கந்தசாமி இராசேந்திரம்
(ஓய்வு பெற்ற உதவி வைத்திய அதிகாரி R. M. P.)

டாக்டரே உம் செல்வங்கள், சீரான வாழ்வு பெற பார்த்து மகிழும் வேளை பரமனடி சேர்ந்தீரே. அலையாக உம் நினைவுகள் ஓயாமல் தொடர்ந்து வர ஆண்டுகள் இரண்டு அகன்று விட்ட போதும் ஆறாத் துயரில் உம்மை கண்ணீருடன் நினைவு கூருகின்றோம். உமது ஆத்மா சாந்திபெற கூடத்து மனோன்மணி அம்மாளை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! ஓம் சாந்தி!!!

பிரிவுத்துயரில் மூழ்கி விட்ட
அன்பு மனைவி, மக்கள், தாய்,
அண்ணன், மைத்துனன், மைத்துனிமார்
மற்றும் உற்றார், உறவினர்.

7ஆம் கட்டை,
சங்கானை.
(6356)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



| மண்ணில்: | விண்ணில்: |
|---|---|
| 02 | 19 |
| 01 | 06 |
| 1960 | 1993 |

## ஜஸ்ரின் சிறில் டொறத்தி

மயிலிட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற சிவனடியார் - பிலோமினா அவர்களின் நேசப் புதல்வியும், ஜஸ்ரின் சிறிலின் (ஜேர்மன்) அன்பு மனைவியும், சிவசுப்பிரமணியம், சிவனேஸ்வரி, சிவபாதம் (ஜோச்). சிவமணி மரியராணி (லண்டன்), சிவநந்தினி லெற்றீசியா (பிரான்ஸ்), சிவதரன் (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரியும், நிர்மலாதேவி (ஆசிரியை), சரோஜினி சவுந்தரராஜா (பிரான்ஸ்), கேபேட் (லண்டன்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார். இவரின் ஆன்ம சாந்திக்காக இன்று 19 - 07 - 1993 காலை 6 மணிக்கு பருத்தித்துறை புனித தோமையார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். இத் திருப்பலியில் பங்கு கொள்ளுமாறு அனைவரையும் வேண்டி நிற்கின்றோம்.

சிவனடியார் குடும்பத்தினர்,
மயிலிட்டி.

'டொறவி வாசா',
கடற்கரை வீதி,
பருத்தித்துறை.
(26545)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### அவர்களது காதில் விழுமா?

தமக்கெனத் தனித்தனியான சொந்த இராணுவங்களைக் கொண்ட இரண்டு நாடுகள் இலங்கைத் தீவில் உள்ளன.

இந்தச் சாதாரணமானதும், தெளிவானதுமான உண்மையை அங்கீகரிப்பதுதான் சமாதானத்திற்கான அடிப்படையாகும்.

இவ்வாறு சிங்கள அறிஞர் ஒருவர் கருத்து வெளியிட்டுள்ளார். லண்டனில் வாழ்ந்து வரும் அட்றியன் விஜேமான என்ற இந்த அறிஞர், கொழும்பில் இருந்து வெளிவரும் ''கவுன்ரர் பொயின்ற்'' என்ற ஆங்கில வார இதழில் (ராவய வெளியீடு] எழுதிய கட்டுரையிலேயே மேற்கண்ட கருத்தை முன்வைத்துள்ளார்.

திரு. விஜேமான லண்டனில் வாழ்கின்றார் உலக நிகழ்வுகளை உரிய நோக்குடன் பார்க்கிறார். யதார்த்தத்தைப் பரந்த மனத்துடன் புரிந்துகொள்ளக் கூடிய பக்குவம் அவருக்கு இருக்கிறது அனுபவத்தினால் உண்மை நிலையை உணர்ந்து பேசுகிறார்.

ஸ்ரீலங்காவின் அரசியல் தலைவர்களும் அவர்களின் எண்ணப் போக்குக்குத் துதிபாடும் தெற்கின் அறிஞர்களும் திரு. விஜேமானவின் கருத்தை சிரணித்துக் கொள்ளமாட்டார்கள் என்பதில் சந்தேகமே இல்லை.

தனது அந்தஸ்தை நிலைநாட்ட விரும்பும் நாடு ஒன்று தனது மரபு ரீதியான படைகளைப் பயன்படுத்தி, விடுதலையையே இலக்காகக் கொண்டு போராடும் கெரில்லாப்படைகளை வெல்ல முடியாது. காலப் போக்கில் எப்படியும் தோற்றே ஆக வேண்டும். யுத்தத்தைத் தொடர்வதால் பொருளாதார ஆகு செலவு மட்டும் உயர்ந்து போகும் என்பதல்ல. அரசியல் நட்டமும் அதிகரிக்கும்—

இராணுவ ரீதியாக விடுதலைப் புலிகள் மீது அழுத்தம் போடுவதால் அவர்களின் தனிநாடு இலட்சியத்தை இல்லாதொழித்து சமாதானத்தை நிலைநாட்டலாம் என்ற கருத்தைச் சிங்கள அரசியல்வாதிகளும், தெற்கின் பத்திரிகைகளும் சிங்கள மக்கள் மத்தியில் பரப்பி வருகின்றன. தங்களைச் சுற்றி நாளாந்தம் உலகத்தில் நடந்துவருவனவற்றை அவர்கள் எந்த அளவுக்கு அறியாமல் இருக்கிறார்கள் என்பதையே இது காட்டுகிறது. — இவ்வாறாக அவர் கூறுவதை தெற்கில் உள்ளோர் காதில் போடுவார்களா? அந்தளவுக்கு அவர்களுக்கு அறிவுப் பக்குவமும் பரந்த மனமும் உண்டா என்றால், இல்லை குறிப்பாக கிணற்றுத் தவளைகள் போல இருக்கும் பௌத்த மத குருமார் இதனை அடியோடு நிராகரிப்பர்.

ஆனால், தமிழீழம் சாத்தியம் இல்லை என்றும் அதனை அடைவது கடினம் என்றும் இன்னமும் கருதிக்கொண்டிருக்கும் ஒரு சில தமிழர்களின் கண்ணை திரு. விஜயமானவின் கருத்துக்கள் திறக்க வேண்டும். ஸ்ரீலங்காப் படைகள் ஓர் அரசினுடையவை. பூரண வசதிகளும் எண்ணிக்கைப் பலமும் கொண்ட அதனுடன் போராடி வெல்ல முடியுமா?—

தென்னிலங்கையர் தரும் அதிகாரப் பரவலுடன் திருப்திப்பட்டு அவர்களுடன் சமாதானத்துக்கு வருவதே நல்லது. எத்தனை வருடங்கள் என்று போராடிக் கொண்டிருப்பது?— என்றெல்லாம் மனத்திற்குள் புறுபுறுக்கும் தமிழர்கள் திரு. விஜேமானவின் கருத்துக்களைப் படித்துச் சிந்தனைத் தெளிவு பெறவேண்டும்.

தமது வசதிகளைக் கருதாது, எதிர்காலத் தமிழ்ச் சந்ததியின் விடுதலையையும் சுபீட்சத்தையும் மனதில் கொண்டு தமிழருக்கு தனி நாடும் தனி அரசுமே சரியான தீர்வு என்பதை மனதில் இருத்திக் கொள்ள வேண்டும். அவர்கள் தமிழீழமே முடிந்த முடிவு என்பதை உணர்ந்து விடுதலைப் போராட்டத்துக்கு உறுதுணையாக உழைக்க வேண்டும்.

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ். மாவட்ட பாடசாலைகள் வலைபந்தாட் சுற்றுப் போட்டியின் கால் இறுதியாட்டங்கள் இன்று பிற்பகல் 3 மணி முதல் இரண்டு மைதானங்களில் நடைபெற விருக்கின்றன. விவரம் வருமாறு:-

**சண்டிக்குளி மகளிர் கல்லூரியில்**

★ யாழ். கன்னியர் மடம் தமிழ் ம. வி. எதிர் சண்டிலிப்பாய் ம. வி. — 17 வயதுப் பிரிவு.

**வேம்படி மகளிர் கல்லூரியில்**

★ மெதடிஸ்த மகளிர் கல்லூரி எதிர் உடுவில் மகளிர் கல்லூரி — 17 வயதுப் பிரிவு.

★ வட இந்து மகளிர் எதிர் உடுவில் மகளிர் —19 வயதுப் பிரிவு.

★ சுண்டிக்குளி மகளிர் எதிர் சாவகச்சேரி மகளிர் — 19 வயதுப் பிரிவு.

இச்சுற்றுப் போட்டியை யாழ். கல்வித் திணைக்களம் நடத்தி வருகிறது.

o o o

திருநெல்வேலி வாலை அம்மன் சனசமூக நிலையம் நடத்தும் ஏழு பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான —10 ஓவர்களைக் கொண்ட — மென்பந்து கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டம் இன்று மாலை 4.30 மணிக்கு நல்லூர் செங்குந்த இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். இறுதியாட்டத்தில் பரமேஸ்வரா வி. க. அணியை எதிர்த்து நொதேன் வி.க. ''ஏ'' அணி மோதும்.

முன்னதாக வாலையம்மன் சனசமூக நிலைய முன்னாள் நிர்வாகத்தினருக்கும் தற்போதைய நிர்வாகத்தினருக்கும் இடையிலான கண்காட்சி கிரிக்கெட் ஆட்டம் ஒன்று இடம்பெறும்.

o o o

யாழ். புனித அடைக்கல மரியாள் விளையாட்டுக் கழகம் 9 பேர் கொண்ட அணிகளுக் கிடையில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இரண்டு ஆட்டங்கள் இன்று பிற்பகல் 3.30 மணி முதல் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும். பங்குபற்றும் அணிகள் வருமாறு;-

★ ஊரெழு றோயல் வி. க. எதிர் கொய்யாத்தோட்டம் வி. க.

★ யாழ். பல்கலைக்கழகம் எதிர் குருநகர் தொடர் மாடி வி. க

o o o

சங்கானை ஜுபிற்றர் விளையாட்டுக் கழகம் .

டர் எஸ். இராஜேந்திரம் ஞாபகார்த்தமாக நடத்தும் மென்பந்து கிரிக்கெட் போட்டித் தொடரில் இன்று மாலை சங்கானை பாரதி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:

★ 3.00 மணி: ஸ்புட்னிக் வி. க. ''ஏ'' எதிர் றொக்ஸன் வி. க. ''ஏ''

★ 4.30 மணி: புளூபேர்ட்ஸ் வி. க. ''ஏ'' எதிர் யுத் வி. க. ''பி''

## ஐ.தே.கவுடன்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

படுவது கட்சிக்காகத் தமது உயிரைத் தியாகம் செய்த தலைவரான லலித்துக்குச் செய்யும் துரோகமாகும்—இவ்வாறு மேற்படி பிரமுகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

ஐ.தே. கவுடன் சேர விரும்புவோரை ஜ ஐ.தே முவிலிருந்து வெளியேற அனுமதித்து விட்டு, லலித்தின் துணைவியார் ஸ்ரீமானி அத்துலத் முதலியின் தலைமையின் கீழ் கட்சியை தொடர்ந்து வழி நடத்திச் செல்லவும் இந்தப் பிரமுகர்கள் விரும்புகிறார்களாம்.

இந்தப் பிரமுகர்களின் வேண்டுகோளை ஸ்ரீமானி அத்துலத்முதலி ஏற்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-6)

## ஜெயலலிதா ..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டுகோள் விடுத்தார்.

இச்செய்தியைக் கேள்விப்பட்டு பாண்டிச்சேரிக்குச் சென்றிருந்த மாநில ஆளுநர் டாக்டர் சென்னாரெட்டி, தமது சுற்றுப்பயணத்தை ரத்துச் செய்துவிட்டு சென்னை திரும்பினார்.

ஜெயலலிதாவின் உண்ணாவிரதம் குறித்து ஆளுநர் தமது ஆழ்ந்த கவலையை வெளியிட்டார்.

ஜெயலலிதா உண்ணாவிரதம் ஆரம்பித்ததைத் தொடர்ந்து தமிழகத்தில் சென்னை, கோவை, பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, வால்பாறை. திருப்பூர் உள்ளிட்ட பல இடங்களில், அ. தி. மு. க. தொண்டர்கள் பஸ் நிலையமறியலை மேற்கொண்டனர். பெரியார் மற்றும் கோவை மாவட்டங்களில் பஸ்கள் ஓடவில்லை. பெரியார் மாவட்டத்தில் அ. தி. மு. க வின் எம். எல். ஏக்கள் சிலரும் தொண்டர்களும் கோவை— சென்னை கடுகதி ரயிலையும் கொச்சி கடுகதி ரயிலையும் மறியல் செய்தனர்.

## 78 ஆம் ஆண்டு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கருத்தரங்கு ஒன்றை நடத்தியது. அக்கருத்தரங்கில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அரசமைப்பில் சீர்திருத்தங்கள் தேவை என்று கூறுபவர்களுக்கு திரு. ஜெயவர்த்தனா இவ்வேண்டுகோளை விடுத்தார்.

1978 ஆம் ஆண்டு அரசமைப்பின் பிதாமகர் எனக் கருதப்படும் திரு. ஜெயவர்த்தனா இந்த அரசமைப்பில் உள்ள சில அம்சங்கள் தொடர்ந்தும் வைத்திருக்க வேண்டியவை ஆகும் என்றும் தெரிவித்தார்.

அடிப்படை உரிமைகள் பற்றிய சரத்துகள் நியாயமானவையாகும்.

சட்டமூலங்களை சபாநாயகர் அத்தாட்சிப்படுத்தல், சில சட்டங்களுக்கு மக்களின் அங்கீகாரம் கோருவது என்ற சரத்து, நாடாளுமன்றத்தின் ஆயுளை நீடிக்க வகை செய்யும் விதி, அரசமைப்பில் குறிப்பிடப்படாத தரங்களைச் சேர்ந்த நீதிபரிபாலன அதிகாரிகளை நீதிபரிபாலன சேவை ஆணைக்குழு நியமனஞ் செய்ய வேண்டும் என்று கூறும் விதி ஆகியவற்றைத் தொடர்ந்து புதிய அரசமைப்பில் வைத்துக் கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறினார்.

1978 அரசமைப்பு நாடாளுமன்றத்தின் மதிப்பை மீள் மதிப்புச் செய்வதே ஒழிய, அதன் மதிப்பைக் குறைக்கவில்லை. ஜனாதிபதியின் அங்கீகாரம் இன்றி சட்டங்களை இயற்றும் பூரண அதிகாரம் இந்த அரசமைப்பின் கீழ் நாடாளுமன்றத்துக்கு வழங்கப்பட்டிருக்கின்றது—என்றும் திரு. ஜே. ஆர். சொன்னார்.

எனவே ''குழந்தையை அதனைக் குளிப்பாட்டிய நீருடன் தூக்கி எறியக் கூடாது'' —என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

னார்.

**மேர்வின் டி சில்வா**

லங்கா கார்டியன் ஆசிரியர் மேர்வின் டி சில்வா பேசுகையில்:-

1978 அரசமைப்பு இரண்டு சோதனைகளை சந்தித்தது. ஒன்று பொருளாதாரப் பிரச்சினை, மற்றது இனப்பிரச்சினை. இந்த அரசமைப்பு பொருளாதாரப் பிரச்சினையில் வெற்றியீட்டியது; இனப்பிரச்சினையில் இது தோல்வி கண்டுள்ளது. இனப்பிரச்சினையைப் பொறுப்பேற்ற திரு. ஜெயவர்த்தனா அதனை மோசமான நிலைக்குக் கொண்டு வந்தார்'' — என்று தெரிவித்தார்.

**அமைச்சரவையில் சேர அமிரை அழைத்தாராம்**

இதற்குப் பதிலளித்த திரு. ஜெயவர்த்தனா, ''இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண முயற்சித்தேன்''—என்றார்.

''அமைச்சரவையில் சேரும்படி அமிர்தலிங்கத்தை அழைத்தேன். பேச்சு வார்த்தைக்கும் அவரை அழைத்தேன். இந்திய—இலங்கை ஒப்பந்தத்தைக் கொண்டு வந்தேன். அந்த ஒப்பந்தம் ஆறு மாத கால அமைதியையே தந்தது''. —என்று திரு. ஜெயவர்த்தனா கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் கூறினார்.

அரசமைப்பில் மேற்கொள்ளப்படும் எந்த மாற்றமும் சிறுபான்மையினரின் தேவைகளைக் கருத்திற் கொண்டதாக இருக்க வேண்டும் என்று, கருத்தரங்குக்குத் தலைமை வகித்துப் பேசிய டாக்டர் எம். பஸ்லி நிஸார் தெரிவித்தார்.

மற்றும் பல பிரமுகர்கள் கருத்தரங்கில் உரையாற்றினர்.

(உ-எ-3)

**குமார் கருத்து**

இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் பேசுகையில்—

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுவதில் நிறைவேற்று ஜனாதிபதிகள் தோல்வி கண்டுள்ளனர். வெஸ்ட்மினிஸ்டர் அரசமைப்பின் கீழ் தமிழர்கள் கூடுதல் செல்வாக்கை அனுபவித்து வந்தனர்.

எனினும் விகிதாசார பிரதிநிதித்துவம் மற்றும் விருப்பு வாக்களிக்கும் முறை ஆகியவற்றினால் சிறுபான்மை இனத்தவர்கள் தங்களுக்குரிய பிரதிநிதித்துவத்தைப் பெற முடிந்தது என்றும் அவர் கூறி

## தெரிவுக்குழு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கைக்கு வழங்கிய பேட்டி ஒன்றிலேயே அவர் இத் தகவல்களைத் தெரிவித்திருக்கிறார்.

''இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண நாங்கள் சமர்ப்பித்த தீர்வுத் திட்டம் மிக முக்கியமானது அது முக்கியமானது என்பதைத் தெரிவுக்குழு இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை.

''இனப்பிரச்சினைக்கு துரிதமாகத் தீர்வு காணப்படவேண்டியது அவசியமானதாகும்.'' — இவ்வாறு தொண்டமான் மேலும் குறிப்பிட்டார்.

(உ-6)

## தஞ்சம் என வந்தோருக்கு . . .

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

வரிசாவற்றுறையைச் சேர்ந்த திரு. சி. ஆத்மநாதன் ஆகிய இருவரும் சேர்ந்து நுட்பமான கலைத்திறனும், கைவண்ணமும் சேர விமான வேலைகள் துரிதமாகச் செய்யப்பட்டன 28 – 03 – 75இல் கும்பாபிஷேகம் நடைபெறவும் ஆலயம் மேலும் பிரபல்யமானது.

பின்னர் அவ்வக் காலங்களில் இருந்த நிர்வாக உறுப்பினர்களின் முயற்சியாலும், தனிப்பட்டவர்களின் உபகரிப்புகளாலும், இளைஞர்களின் முயற்சியாலும் நீர் இறைக்கும் இயந்திரம், திருமஞ்சனக் கிணறு, துவசஸ்தம்பம், ஆலயத்திற்கென தனிப்பட்ட ஒலி பெருக்கி சாதனம், ஜெனரேற்றர், சண்டேசுரருக்கு தனியான ஆலயம், நுழைவாயிலில் வளைவு கோபுரம், மூர்த்திகளுக்குரிய வாகனங்கள், சிறப்பாக விழாக் காலங்களில் அம்பாள் திருவுலா செய்வதற்கான கலை நுட்பம் செறிந்த கேடகம் (இளைஞர்களின் முயற்சி) யாவும் கிடைக்கப் பெற்றதுடன், ஆலய உள் சுவர்களில் அம்பாளின் பல்வேறு மூர்த்தங்கள் வர்ண ஓவியமாக தீட்டப்பட்டன.

**பூசைகள்**

தற்போது ஆலயத்தில் ஆண்டு தோறும் நடைபெறும் பதினைந்து நாள் திருவிழாக்களில் பூரணமம் (ஆடிப்பூரம்) பத்திமுத்தி பாவனா உற்சவம், திருவிளக்குப் பூசை, சுமங்கலிப்பூசை நிகழ்வதுடன், விழாக் காலங்களில் சமயப் பெரியார்களை வருவித்து உபந்நியாசங்களை செய்வித்தல், மாதாந்தப் பௌர்ணமி தினத்தன்று சங்காபிஷேகம், திருவிழாவும், வெள்ளிக்கிழமை கூட்டுப் பிரார்த்தனை, மகா சிவராத்திரி, பங்குனி உத்தர விழா, நவராத்திரி, கந்த சஷ்டி, திருவாதிரை நாட்களில் விசேட பூசைகள், நால்வர் குரு பூசைகள் முதலியன ஒழுங்காக நடைபெற்று வருகின்றன.

**முத்துமாரி**

அம்பாளுடைய மூர்த்திகரம் அல்வாயிலும் அயற் கிராமங்களிலும் பிரசித்தமானது. திருவருட்சக்திக்கு உருவம் இல்லை. உமாதேவியின் ஒரு கலைதான் முத்துமாரி. சின்னமுத்து, கொப்புளிப்பான், கூகைக்கட்டு, அம்மை, பேதி போன்ற கொள்ளை நோய்களை மாரி போல் முத்து முத்தாக அள்ளி எறிவதால் முத்துமாரி என்னும் நோய் தாங்க முடியாது வருந்தி வேண்டும்போது நோயின் வெம்மையைக் குறைத்து குளிர்மை செய்வதால் முத்துமாரி என்றும் வழங்கப்படுவதாக மக்கள் நம்புகிறார்கள்.

தேவியை இலந்தையின் கீழ் வைத்து ஆதரித்தமையால் தேவியிலந்தை என வழங்கி காலகதியில் அதுவே வேலிலந்தை என மருவி வந்திருக்கலாம் என நம்ப இடமுண்டு.

**இலந்தைச் சோலையில் அம்பாளின் அற்புதம்**

அக்காலத்தில் வேலிலந்தைப் பகுதி இருப்பை வேம்பு, இலந்தைகள் நிரம்பிய சோலை. வல்லியான் என்பவர் தான் வளர்க்கும் ஆடுகளை மேயவிட்டு இலுப்பை மரத்தின் கீழ் ஒருநாள் இளைப்பாறும் நேரம் கண்ணயர்ந்தார். அம்பாளுடைய [illegible] வேளைகளில் உணவு வழக்கம். கனவிலே அழகான பெண்கள் சிலர் தோன்றி ஆடுகளை தமது உரிமையென வாதிட்டார்கள். வல்லியான் கண் விழித்துப் பார்த்த போது ஆடுகள் யாவும் செத்துக் கிடந்தன. தன் சீவியம் கெட்டு விட்டதே என மனம் நொந்த வல்லியான் வீட்டிற்குச் சென்று நடந்தவற்றைக் கூறி மறுநாட் காலையில் இரண்டொருவருடன் ஆடுகளை அப்புறப்படுத்த வருகையில் ஆடுகள் யாவும் பட்டியை நோக்கி விரைந்து வருவது கண்டு அம்பாளின் கருணையை எண்ணி அதிசயப்பட்டார்.

1987இல் இந்திய இராணுவம் வல்வெட்டித்துறை, பருத்தித்துறைப் பகுதியில் நிலைகொண்ட காலம், அம்பாள் தீர்த்த உற்சவத்திற்கு விடியற்காலை இன்பருட்டிக் கடலுக்குப் போக வேண்டும். அதிகாலை 4-00 மணிக்கு பூசையாரம்பித்து 6-00 மணிக்கு தீர்த்தமாடி 6-30க்கு திரும்புவதென ஒழுங்கு. மக்கள் வெளியே நடமாட முடியாத ஊரடங்குச் சட்டம். உத்தரவுபெற்று தீர்த்தமாட ஏற்பாடாகியிருந்தது. மக்கள் பயத்த நிலையிலும் அம்பாளை மனதில் வேண்டிக் கொண்டு ஆயிரக்கணக்கில் தீர்த்தக்கரையை அண்மிவிட்டார்கள். பலாலி, தொண்டமனாறு முகாம்களிலிருந்து ஷெல்கள் ஏவப்படுகின்றன. இராணுவத்தினரின் ரோந்துப் படகுகள் வெகுதூரத்தில் ஓடித் திரிகிறது. நடப்பது நடக்கட்டும் என்ற மனத் துணிவுடன் மக்கள் செல்கிறார்கள். கடற்கரை அண்மிவிட்டது. அம்பாளின் திருவருள் வான மண்டலம் எங்கும் ஒருவரையொருவர் காண முடியாதபடி புகை மண்டலமாய் விட்டது. கடல்பரப்பில் என்ன நடக்கிறதென்று தொலைநோக்கியாலும் காண முடியாத அளவு இருள். அம்பாள் கடலில் இறங்கி தீர்த்தமாடி கரையேறி பூசை முதலிய முடித்து வீதியைக் கடந்து வெகுதூரம் வந்த பின்னரே இருள் நீங்கி வானமண்டலமெங்கும் சூரிய கிரணங்கள் பிரகாசிக்கத் தொடங்கின. அம்பாளுடைய திருவருளென யாவரும் அதிசயித்தனர்.

இந்திய இராணுவத்தினர் ஆலயத்தை நோக்கி ஏவிய பாரிய ஷெல் ஆலயத்தையோ, அங்கு நின்ற மக்களையோ, அர்ச்சகரையோ தாக்கா வண்ணம் ஆலய முன்றலில் நின்ற பாரிய இலுப்பை மரத்தின் அடிப்பாகத்தில் வந்து வீழ்ந்ததும், உலகமாதாவாகிய அன்னை தன்பிள்ளைகளுக்கு வந்த துன்பத்தை தானே தாங்கிக் கொண்ட பெருங் கருணையல்லவா?

ஆகம விதிமுறைகள், தவறிய பூசை முறைகளால் நாட்டுக்கு கேடுவருவதுண்டு சாந்தம் அமைதி, தெய்வீகம் யாவும் அமையப்பெற்ற ஒருவர் அம்பாளின் தேவஸ்தானக் குருக்களாய் வாய்க்கப் பெற்றது. அல்வையூர் மக்களுக்கு கிடைத்த அருட்கொடை கிரியா பக்திமணி சிவஸ்ரீ தி. கிருஷ்ணமூர்த்திக் குருக்கள் நியமமும், ஆசமவிதியும் பிசகாது செய்துவரும் பூசையாகங்களால் அம்பாளின் திருவருள் மூர்த்திகரம் கூடிக் கொண்டு வருகிறது. ஆலய பரிபாலன சபையார் பக்தி சிரத்தையோடு அம்பாளை வழிபாடு செய்து அடியார்களையும் வழிபட வைக்கிறார்கள்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்னிரண்டு நிலையங்களில் இராணுவத்துக்கு ஆட்சேர்ப்பு

கொழும்பு, ஜூலை 19

இலங்கை இராணுவத்தின் தொண்டர் படை, காலாட் படை, தேசியப் பாதுகாப்புப் படையணி ஆகியவற்றுக்கு ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப் படவிருப்பதாக அறிவிக்கப் படுகிறது.

எதிர்வரும் வியாழன் முதல் பன்னிரண்டு நிலையங்களில் நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்படவுள்ளன.

காலாட்படைப் பிரிவுக்கு 18 முதல் 20 வயதுக்குட்பட்டவர்களும் —

தேசிய பாதுகாப்புப் படையணிக்கு 18 முதல் 28 வயதுக்குட்பட்டவர்களும் சேர்த்துக் கொள்ளப்படவிருக்கின்றனர்.

ஆண்டு 8 அல்லது ஆண்டு 9 சித்தியடைந்தவர்கள் ஆட்சேர்ப்பு நிலையங்களில் நேரடியாகவே நேர்முகப் பரீட்சைகளுக்குச் சமுகமளிக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

22, 23ஆம் திகதிகளில் மொறட்டுவ, கட்டுபெத்தவில் உள்ள தொண்டர் படை அலுவலகம், குருணாகலையில் உள்ள இராணுவத் தலைமையகம், ஈரற்பெரியகுளத்தில் உள்ள விஜயபாகு காலாட் படை அலுவலகம் ஆகியவற்றில் நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்படும்.

ஏனைய நாட்களில் இராணுவத்துக்கு ஆட்சேர்க்கும் நடவடிக்கைகள் வெலிஓயா, அனுராதபுரம், புத்தளம், மின்னேரியா, கண்டி, இரத்தினபுரி, தியத்தலாவ, நுவரெலியா, மாத்தறை ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளன என்று அறிவிக்கப்படுகிறது. (உ-எ)

## இன்று

யாழ். மாவட்ட சாரணர் சங்கத்தைச் சேர்ந்த சகல சாரணர்கள் திரிசாரணர்கள் சாரணத்தலைவர்கள் குழுச் சாரணத் தலைவர்கள் ஆகியோருக்கான விசேட கூட்டம் இன்று பிற்பகல் 4 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

## முதலமைச்சர் புஞ்சிநிலமே காலமானார்

சப்ரகமுவா மாகாண முதலமைச்சர் ஜி.வி. புஞ்சிநிலமே (வயது 60, நேற்று இருதய நோயால் இரத்தினபுரி ஆஸ்பத்திரியில் மரணமானார்.

1960 இல் அரசியலில் பிரவேசித்த அவர் 1983 முதல் பிரதி அமைச்சராகப் பதவி வகித்தார்.

முதலாவது, இரண்டாவது மாகாணசபைத் தேர்தல்களில் வெற்றியீட்டிய அவர் 1988 முதல் மாகாண முதலமைச்சராகப் பணியாற்றினார். (உ-எ)

## வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஜூலை 19

நேற்றுக் காலை எதிர்பாராத விதமாக ஏற்பட்ட விபத்து ஒன்றில் வீரவேங்கை கப்டன் தக்சிரன் அல்லது மாமா (இராசையா யோகராஜா—மயிலிட்டி வடக்கு) வீரச்சாவடைந்தார். (ஒ-3)

## தமிழ் வியாபாரி சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், ஜூலை 19

மட்டக்களப்பு வாகரைப் பகுதியில் இராணுவத்தினர் பதுங்கியிருந்து தமிழ் வியாபாரி ஒருவரை சுட்டுக் கொன்றனர்.

கடந்த வெள்ளிக்கிழமை வாகரை 5ஆம் வட்டாரத்தில் இச்சம்பவம் நடந்தது.

வாகரையைச் சேர்ந்த ஏழு பிள்ளைகளின் தந்தையான சண்முகம் என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

## தமிழீழ சட்டங்களுக்கு..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எமது மக்களின் பண்பாடு, தேசியத் தன்மை என்பனவற்றுக்கு ஏற்ப எங்களுக்குரிய சட்டங்களை நாங்களே ஆக்க வேண்டும்.

மக்களுக்கு சமமான நீதி கிடைக்கவும், ஒரு நிரபராதி தண்டிக்கப்படாமல் இருக்கவும் ஏற்ற வகையில் எமது நீதி மன்றங்களை அமைக்க முயல்கிறோம்.

நீதியாளர்களாகப் பணிபுரிய இருக்கும் போராளிகளுக்குச் சட்டக் கல்வி புகட்டி இருக்கிறோம்.

தமிழீழ நீதிமன்றங்கள் எல்லா இடங்களுக்கும் படிப்படியாக விஸ்தரிக்கப்படும்.

தமிழீழ நீதி அமைப்புச் சம்பந்தமான ஆலோசனைகள், ஆரோக்கியமான விமர்சனங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்;

நீதிமன்றங்களில் வாதாடும் சட்டத்தரணிகளாகிய நீங்கள் உங்கள் வாதத் திறமையின் மூலமோ, சட்ட வாதங்கள் மூலமோ குற்றவாளிகள் தப்பித்துக்கொள்ள முடியாத வகையில் செயற்படுவீர்கள் என எதிர்பார்க்கிறோம் என்று கூறினார்.

காவல்துறைப் பொறுப்பாளர் திரு. பா. நடேசன் பேசுகையில் தெரிவித்ததாவது:-

அமையப்போகும் தமிழீழத்திற்கான அடி அத்திவாரங்களைப் போடும் முகமாகவே காவல்துறை, நீதித்துறை போன்றவற்றை ஆரம்பித்து வருகிறோம். ஏனைய நாடுகளில் இவை 100 முதல் 200 வருட அனுபவம் வாய்ந்தவை. ஆனால் நாம் இப்போதுதான் ஆரம்பிக்கிறோம் இக்கால கட்டத்தில் பல பிரச்சினைகள் தோன்றும். எமது வளர்ச்சியின் மூலம்தான் அவற்றை நிவர்த்தி செய்ய முடியும்

இதுவரை நீதிமன்றங்கள் இல்லாததால், காவல்துறையே முழு விசாரணைகளையும் மேற்கொண்டு வந்தது. இனிமேல் காவல்துறை, நீதிமன்றங்களின் செயற்பாடுகள் விரிவடையும்— என்று தெரிவித்தார்.

தமிழீழ துணை அரசியல் பொறுப்பாளர் திரு. கரிகாலன் பேசுகையில்—

தமிழ் அரசர்கள் நீதிநெறி வழுவாது ஆட்சி செய்த வரலாறு உண்டு. தமிழர்களுக்குத் தனியான நீதியமைப்பு இருந்திருக்கிறது. அந்த வகையில் எமக்கான நீதியமைப்பை உருவாக்க வேண்டும்; அதற்கான சட்டங்களை இயற்றவேண்டும்.

நாளுக்கு நாள் சமூகம் மாற்றமடைந்து வருகிறது. தேவைகளும் மாறுகின்றன. இதற்கேற்ற வகையில் சட்டங்களும் நெகிழ்ச்சி அடைய வேண்டும்— என்று தெரிவித்தார். (அ)

## சரிந்து...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

லலிதா தமது அமைச்சர்கள் மற்றும் முக்கிய அதிகாரிகளுக்குக் கூட அறிவிக்காமல் திடீரென்று உண்ணாவிரதத்தை ஆரம்பித்திருக்கிறார்.

★ தமிழ்நாட்டின் பலஇடங்களில் அ. தி. மு. க. தொண்டர்கள் அனுதாப உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளனர்.

★ இந்த உண்ணாவிரதத்தில் ஏனைய அமைச்சர்கள் கலந்துகொள்ளக்கூடாது என்று முதலமைச்சர் ஜெயலலிதா கூறியுள்ளார். அமைச்சர்கள் தங்கள் நிர்வாக அலுவல்களைக் கவனிக்கவேண்டும் என்றும் ஜெயலலிதா கூறியிருக்கிறார்;


## மரண அறிவித்தல்கள்

### சி. மு. தேவராசா

(உரும்பராய்)

(Retired Superintendent of Tea Estate - Nawalapitiya)

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், உரும்பராயை வசிப்பிடமாகவும் கொண்ட சி. மு. தேவராசா 17-7-93 இல் சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் பார்வதிப்பிள்ளையின் அன்புக்கணவரும், சரோஜினிதேவி, காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம், இவராசா (கனடா), சந்திராதேவி, பரமசிவராஜா ஆகியோரின் அன்புத் தந்தையும், V. T. கந்தசாமி (ஆசிரியர் V. T. K), கலைச்செல்வி, ரமணன், செந்தில்மதி ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரதீபன், சுதர்ஷினி, மதுரா, அஞ்சனா, டினேஸ், அனுபா, பவித்திரா, ஹரேஷன் ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (19-7-93) காலை 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
மருமக்கள்
V. T. கந்தசாமி
ரமணன்

உரும்பராய். (26576)

### வைத்திய கலாநிதி பிறாஸ்சுப்பிள்ளை சூசைப்பிள்ளை

(சில்லாலை)

சில்லாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட பிறான்சுப்பிள்ளை சூசைப்பிள்ளை 16-07-93 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற வைத்திய கலாநிதி பிறான்சுப்பிள்ளை ஒளறேன்கிபாவின் அன்பு மகனும், செல்வி அகத்தம்மா (வைத்தியர்), அருட் சகோதரி ஸ்ரனிஸ்லஸ் மேரியின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற அலோசியஸ் (அலோஷியஸ் ஹாட்வெயார்ஸ் [பண்டத்தரிப்பு), திருமதி ஞானம் ஆகியோரின் அன்பு மாமனாரும், ஞானேன், றட்னேன், தனேன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார். அன்னாரது பூதவுடல் 17-07-93 அன்று கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது என்பதை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
ஞானம் அலோஷியஸ்
(மருமகள்)

யாழ்ப்பாணம். (26573)

### திருமதி செல்லையா யோகம்மா

மண்டைதீவு பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய திருமதி செல்லையா யோகம்மா 16-07-93 அன்று சிவபதம் அடைந்து விட்டார்.

இவர் காலஞ்சென்ற பொன்னையா செல்லையாவின் அன்பு மனைவியும், துதிமதிதேவி (பிரான்ஸ்), தவானந்தன் (பிரான்ஸ்), மகாதேவன் (வியாபாரம், திருநெல்வேலி சந்தை), பத்மநாதன் (முகாமையாளர், விசுவமடு ப.நோ.கூ. சங்கம்), குணபாலன் (பிரான்ஸ்), கமலேஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், பாக்கியநாதன் (பிரான்ஸ்), இராஜகுணம், மகாலட்சுமி மலர்மகள் (ஆசிரியை. கிளி-தருமபுரம் மகாவித்தியாலயம்), சுதாநிதி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், வசந்தினி (பிரான்ஸ்) நிசாந்தினி, பிரபாலினி, தமிழினி, சுபஸ்ரீகா, பிறேந்தன். சுஜித்தா, சுவர்ணா ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று 18-07-93 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று கொக்குவில் இந்து மயானத்தில் தகனக் கிரியைகள் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
செ. மகாதேவன் [மகான்]
(மகன்)

குளங்கரை ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு. [26574]

### செல்லையாபிள்ளை யோகீஸ்வரன்

(இளைப்பாறிய யாழ். வைத்தியசாலை நிர்வாக உத்தியோகத்தர்)

சாவகச்சேரி தாமோதரம்பிள்ளை வீதியைச் சேர்ந்த செ. யோகீஸ்வரன் நேற்று (18-07-93) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காமாட்சியின் [இளைப்பாறிய ஆசிரியர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி] அன்புக் கணவரும், ஜெயக்குமார் (ஜெயா) [உதவிப் பதிவாளர், யாழ். பல்கலைக் கழகம்], சூரியகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், கலாயினி, சித்திராவின் அன்பு மாமனாரும், வாணி, மேனகா ஆகியோரின் பிரிய முள்ள பேரனும், காலஞ்சென்ற குமாரதாசன், நடராசா, காலஞ்சென்ற சண்முகநாதன், திருமதி சபாநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

ஜெயக்குமார்
[மகன்]

தாமோதரம் வீதி
சங்கத்தானை
சாவகச்சேரி. (26575)

## புனித யாகப்பர் ஆலய வருடாந்த உற்சவம்

சில்லாலை தெற்கு புனித யாகப்பர் ஆலய வருடாந்த திருவிழா எதிர்வரும் 22-07-1993 வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து மூன்று நாள் ஆராதனையும் ஞாயிற்றுக்கிழமை காலை 7-00 மணிக்கு திருநாள் திருப்பலியும் அதைத் தொடர்ந்த திருச்சுரூப பவனியும் நடைபெறும்.

(26566)

## மரண அறிவித்தல்

### சபாபதி இராசலிங்கபத்தர்

கொக்குவில் மேற்கு சொர்ணவடலியைச் சேர்ந்த சபாபதி இராசலிங்கப்பத்தர் சிவபதமடைந்துவிட்டார். அன்னார் பூமணியின் அன்புக் கணவரும், நேசமணி, சபாபதி, ரகுபதி (கனடா), யோகமணி (கனடா), கலாமணி (கனடா) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், காலஞ்சென்ற நந்தகுமார், இராசேஸ்வரி, தங்கவேலு (கனடா), செல்வராணி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், சோபனா, தினேஸ், சுலக்ஷனா, சுவிஸ்காந்த், வனீசன், அனோஜன், கம்சா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (19-7-93) அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 3.00 மணியளவில் தகனக் கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு கொண்டு செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

தகவல்:
இ. சபாபதி
(மகன்)

சொர்ண வடலி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். [26577]

## நியூ விமாகி

27/3, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

சகலவிதமான

★ சைக்கிள் உதிரிப்பாகங்கள் ★ பெயின்ற் வகைகள்
★ வாணிஸ் ★ கிறிஸ்

போன்ற அனைத்துப் பொருள்களும்

மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

விற்பனையாளர்களுக்கு விசேட விலைக் கழிவு உண்டு.

விமாகி நிறுவனம்.

(சி-2592)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292 ஆம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 19-07-1993 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org